கடலூர் மாவட்டம், கடலூர் வட்டம், கடலூர் ஊராட்சி ஒன்றியம், நடுவீரப்பட்டு கிராமம் மற்றும் நடுவீரப்பட்டு ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.**A.சந்தோஷம்**

தீர்மானம் எண் : **01/2023** நாள் : **28/ 12/2023**

பொருள்: உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு – கடலூர் மாவட்டம் – கடலூர் வட்டம் – கடலூர் ஊராட்சி ஒன்றியம் – நடுவீரப்பட்டு ஊராட்சி மற்றும் கிராமம் – ச.எண்கள். **178/1B2B, 178/4B1** - இடத்தில் **2.35** ஏக்கர் (அ) **9532.00** ச.மீ – பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள **"ஸ்ரீ மைலம் முருகன் நகர்"** குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப இறுதி ஒப்புதல் – வழங்குதல் குறித்து

பார்வை: 1) மனுதாரர் திரு.**S.**சுகுமார், கோட்டக்குப்பம் அவர்களின் விண்ணப்பம் நாள்: 21.12.2023

2) அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.04.05.2017 .

3) மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர். கடலூர் மாவட்டம் அவர்களின் கடிதம் இணையதள வாயிலாக **Online Application No. C8MEHZ2T/2023/TCP** நாள். 27.11.2023

4)சார்பதிவாளர், பதிவுத்துறை, சார்பதிவாளர் அலுவலகம், நெல்லிக்குப்பம், ஆவண எண். 3910/2023 நாள்.16.11.2023

5) கூராய்வு கட்டணம் செலுத்து ரசீது. **INDIAN BANK AC No. 7386187704** நில பயன் மாற்று கட்டணம் செலுத்து ரசீது. **INDIAN OVERSEAS BANK Challan No. 20240514021267** நாள். 14.05.2024

உத்திரவு :

உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு – கடலூர் மாவட்டம் – கடலூர் வட்டம் – கடலூர் ஊராட்சி ஒன்றியம் – நடுவீரப்பட்டு ஊராட்சி மற்றும் கிராமம் – ச.எண்கள். **178/1B2B, 178/4B1** - இடத்தில் **2.35** ஏக்கர் (அ) **9532.00** ச.மீ – பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள **"ஸ்ரீ மைலம் முருகன் நகர்"** குடியிருப்பு மனைப்பிரிவு, பார்வை 1 மற்றும் 3–ல் சுட்டிய கடிதங்களுடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதலுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பார்வை (2) மற்றும் (3)–ல் சுட்டியபடி மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை (4)–ல் சுட்டியபடி சாலை, மூலை முடக்கு மற்றும் பொது ஒதுக்கீடுகளை தானபத்திர ஆவண எண். 3910/2023 நாள்.16.11.2023 –ல் உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்கப்பட்டு தானப்பத்திரம் அசல் பெறப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து பார்வை (3)–ல் சுட்டியபடி பார்வை (5)–ல் சுட்டியபடி கூராய்வு கட்டணம் மற்றும் நில பயன் மாற்று கட்டணம் செலுத்தப்பட்டு உத்தேச மனைபிரிவுக்கு கீழ்கண்ட இறுதி ஒப்புதல் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

மனைப்பிரிவிற்கு இணைப்பிலுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. இணையதளம் வாயிலாக ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பரிவு வரைபடத்திற்கு மேற்படி நடுவீரப்பட்டு ஊராட்சி மன்ற தீர்மான எண். 01/2023 என எண்ணிடப்பட்டு அசல் வரைபடங்கள் மற்றும் ஒப்புதல் ஆணை நகல் இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

உள்ளாட்சியின் இறுதி ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்மந்தப்பட்ட நகர் ஊரமைப்பு மற்றும் பத்திரபதிவு அலுவலகத்திற்கும் நில அளவை துறைக்கும், தகவலுக்கும், உரிய நடவடிக்கைக்கும், அனுப்பிவைக்கப்படுகிறது.

சிறப்பு நிபந்தனைகள்:

1.) மனைப்பிரிவுகள் சாலைகள் அனைத்தும் மனைப்பிரிவு வரைபடத்தின்படி உள்ளாட்சி சட்டங்களின் படி சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அபிவிருத்திக்கு எடுத்துக்கொள்ளப்படும். மேலும் பொது துறையில் இருந்து **(Public Road)** மனுதாரர் மனைப்பிரிவு அமையும் இடம் வரை அணுகுசாலையாக காட்டப்பட்டுள்ள சாலைப்பகுதியை, உள்ளாட்சி தனது பொறுப்பில் எடுத்துக்கொள்ளும்.

2.) மனைப்பிரிவு வரைபடத்தின் மனைப்பிரிவு சாலையும் **OSR** மற்றும் பொது ஒதுக்கீடு இடங்கள் இருப்பின் அதனையும் மனைப்பிரிவு வரைபடம் மற்றும் தானப்பத்திர நகலுடன் சம்பந்தபட்ட வட்டாட்சியருக்கு அனுப்பி வருவாய் ஆவணங்களில் உட்பிரிவுடன் தகுந்த பதிவுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

3.) நகர் ஊரமைப்பு அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் அலுவலக அனுமதியின்றி மாற்றம் செய்யக்கூடாது.

4.) சாலையின் இருபுறங்களிலும் 10 அடி தூரத்திற்கு ஒன்று மரம் நட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

5.) மேற்கண்ட நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் இந்த உத்தரவு எப்போது வேண்டுமாலும் ரத்து செய்யப்படும்.

மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு நடுவீரப்பட்டு ஊராட்சி மற்றும் கிராமம், ச.எண்கள். **178/1B2B, 178/4B1** - இடத்தில் **2.35** ஏக்கர் (அ) **9532.00** ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் அமைந்துள்ள உத்தேச குடியிருப்பு சாதாரண வகை மனைகள் 32 (மனை எண்கள் 1 முதல் 32 வரை) மனைகளுக்கு **"ஸ்ரீ மைலம் முருகன் நகர்"** என்னும் பெயருடன் நடுவீரப்பட்டு ஊராட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

இணைப்பு

வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்

A. Santhoshom

திருமதி. **A. சந்தோஷம்**
ஊராட்சி மன்ற தலைவர்

17.5.2024
தலைவர்
நடுவீரப்பட்டு ஊராட்சி,
கடலூர் ஒன்றியம்.

பெறுநர்
திரு.S.சுகுமார்,
எண்.1, முராது தெரு,
கோட்டக்குப்பம்,
வானூர் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.